மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தைப்பற்றியே இன்னும் முடிவு செய்யவில்லையே, உட்காருங்கள்.

பேரவை முன்னுள்ள கேள்வி—

''சட்ட மன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் 'வினுக்கள்—விடைகள்' என்றுள்ள தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

2. தகவல் கோரல்.

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூரிலே குமரன் பஞ்சாலை, ராம்நாராயண் பஞ்சாலை ஆகிய இரண்டு பஞ்சாலைகள் 5—3—78, 7—3—78 மூடப்பட்டது பற்றி செக்ஷன் 41-லே ஒருதீர்மானம் கொடுத்திருக்கிறேன். கால் அட்டென்ஷன் நோட்டீஸ், அட்ஜர்ன்மென்ட் மோஷன் அல்ல அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல என்று நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நீண்ட நாள் அனுபவம் உண்டு, மரபும், விதிகளும் தெரிந்தவர். நான் பல முறை சொன்னது போல், நிராகரிக்கப்பட்டது ஏன் என்று கேட்பதே தவறு. அவைத் தலைவரால் அது வேண்டாம், தேவையில்லை என்று நிராகரிக்கப்பட்டது பற்றி இந்த அவையிலே கேட்பது தவறு. ஆகவே, எந்த விதியின்கீழ் அதை அனுமதிக்கவில்லை என்று கேட்கிறீர்கள் என்றுசொன்னுல் நலமாக இருக்கும். என் அறையிலே வந்து இதைப்பற்றிக் கேட்டால், எந்த விதியின் கீழ் நிராகரிக்கப்பட்டது என்பதைப் பற்றி நான் விளக்குவதற்கு நலமாக இருக்கும். எனவே அறையிலே வந்து கேளுங்கள். அவையிலே கேட்க வேண்டாம். அவையிலே கேட்டால் நான் எப்படி பதில் சொல்ல முடியும். எனவே தயவு செய்து உட்காருங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவசாயிகள் ரெவின்யூ கோர்ட்டு மூலம் வெளியேற்றப்படுகிறார்கள் என்று 20 ஆம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தேன். அன்றைய தினம் மானியக் கோரிக்கையின் மீது பேசலாம் என்று சொல்லி யிருக்கிறீர்கள். எந்த மானியக் கோரிக்கையின் மீது இன்றையத் தினம் பேசலாம் என்பதைச் சொன்னால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கொடுத்தது எந்தப் பிரச்சினையைப் பற்றி, எப்படி எப்போது நிராகரிக்கப் பட்டது என்ற தகவல் தற்போது என் கையில் இல்லை. தாங்கள் மட்டும் கையில் வைத்துக் கொண்டு இந்த அவையில் கேட்டால், அதற்கு நான் எப்படி பதில் சொல்ல முடியும்? எனவே, இதைப் பற்றி என் அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : ரெவின்யூ கோர்ட்டு சம்பந்தமானது. முன்னாலேயே இங்கே சொல்லியிருக்கி றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இதைப் பற்றி என் அறையிலே வந்து கேட்க வேண்டும் தாங்கள் கையில் வைத்துக்கொண்டு பேசினால், நான் அதற்கு எப்படி பதில் சொல்ல முடியும்? அறையிலே வந்து கேளுங்கள். அதற்கு விவரம் சொல்லலாம். இங்கே அதைப்பற்றி தயவு செய்து கேட்க வேண்டாம், அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் 42-வது விதியின் கீழ் அறந்தாங்கியைப் பற்றிக் கொடுத் திருந்தேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதே பதில்தான் உங் களுக்கும், உட்காருங்கள். எதிர்க் கட்சியிலே இன்னும் இங்கே யார் யார் இன்று பேச இருக்கிறார்கள் என்பது பற்றி யாரும் எழுதிக் கொடுக்கவில்லை.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, என்னென்ன கோரிக்கைகளை எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள் என்ற தகவலைத் தந்தால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு நிகழ்ச்சி நிரலில் உள்ள எல்லாமே எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. முதலில், மருத்துவம், பொதுச் சுகாதாரம் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஏ. லத்தீப்.

(3) 1978–79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 18—மருத்துவம் மற்றும்.

(ஆ) கோரிக்கை எண். 19—மக்கள் நல்வாழ்வு—தொடர்ச்சி.

[முற்பகல் 9-10]

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை மானியங்களைக் குறித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் மாநிலத்தில் 8 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 8 மருத்துவக் கல்லூரிகளும் ஒரு குறிப்பிட்ட வட்டாரங்களில் அமைந்து இருக்கின்றனவே தவிர மாநிலத்தில் பரவலாக இவை ஏற்படுத்தப்படவில்லை என்ற ஒரு குறை, அந்தக் குறைகளின் வாயிலாக ஏற்பட்டிருக்கின்ற விளைவுகள் இவைகளைப்பற்றி அரசு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 8 மருத்துவக் கல்லூரிகளிலே சென்னை நகரத்தில் 3 மருத்துவக் கல்லூரிகளும் சென்னை நகரத்தை அடுத்துள்ள செங்கற்பட்டிலே 1 மருத்துவக் கல்லூரியும், ஆக 35 மைல்களுக்குட்பட்ட ஒரு வட்டாரத்திலேயே 4 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன.

தென்புலத்திற்குத் தேவையாக மதுரையிலேயும், திருநெல்வேலியிலேயும் மேற்குப் பகுதிக்காக கோயம்புத்தூரிலேயும், திருச்சியிலேயும் மருத்துவக் கல்லூரிகள்